**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண். 313/2015**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. பாலகிருஷ்ணன் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. கோவிந்த செட்டியார் | தொழில் | .. எல்.ஐ.சி. முகவர் |
| வயது | .. 80 | ஜாதி | .. ஆயிர வைசியர் நகரம் |
| கிராமம் | .. சேலம் | நாள் | .. 16.11.2021 |
| மாவட்டம் | .. சேலம் மாவட்டம் | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. பாலகிருஷ்ணன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 - பாலகிருஷ்ணன் - 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், கட்டிடத்தை நீக்கி கொடுக்கவேண்டும் என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே நெம்பரில் குறிப்பிட்ட கட்டிடம் அமைந்துள்ளது என்றால், சர்வே எண். 260 இல் அமைந்துள்ளது. வழக்கு சொத்திற்காக நீங்கள் பட்டா ஏதேனும் வைத்துள்ளீர்களா என்றால், இல்லை. சர்வே எண்.260 இல் உள்ள சொத்துக்கள் 17 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. 17 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது எனக்கு தெரியும் என்றாலும், தெரிந்ததை கூறினால் உண்மை தெரிந்து விடும் என்பதற்காக எனக்கு தெரியாது என்று கூறுகிறேன் என்றால், சரியல்ல. சர்வே எண்.260 இல் என்னென்ன சொத்துக்கள் உள்ளன என்றால், தாவா சொத்துக்கு கிழக்கு பக்கம் எங்கள் சொத்து உள்ளது, மேற்கு பக்கம் எங்கள் குடோன் உள்ளது, வடக்கு பக்கத்தில் எங்கள் கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி உள்ளது. பஞ்சாயத்து அலுவலகம் மேற்கில் உள்ளது, பஞ்சாயத்து அலுவலகம் உள்ள இடமும் நாங்கள் கொடுத்த இடம்தான். வா.சா.ஆ.1 இல் இந்த வழக்கு சொத்தானது E.P. மூலம் பெறப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

வா.சா.ஆ.1 இல் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சக்குபந்தி விபரம் குறிப்பிட்டுள்ளார்கள். வா.சா.ஆ.2 ஆவணம் பாகப்பிரிவினை பத்திரம் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 இல் சர்வே எண்.260 குறித்த விபரங்களை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் ஒரு மாதிரி வரைபடம் என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.260 குறித்த விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 3 வரையுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள வீடு சம்பந்தமானது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வீடு தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் வா.சா.ஆ.7 இல் குறிப்பிட்டுள்ள வீடு சம்பந்தப்பட்டது என்று சொன்னால், சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டாரா என்றால், பார்வையிட்டார். Ex.C1 குறித்து நீதிமன்றத்தில் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்தீர்களா என்றால், இல்லை.

1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / பாலகிருஷ்ணன்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.